உ

வாணிப செவ்வேள் மலரடி போற்றி

நிஜவைசியர் நிருபண நிர்த்தூளிதம்

வாணிய வைசிய விளக்கச் சூறுவளி.

சென்னை மஹா வித்துவான் ஸ்ரீலஸ்ரீ

கோவளம் அப்பாசாமி செட்டியார் அவர்கள்

குமாரரும் வைசிய கல்வி விளக்க சங்கத்து வித்துவானுமாகிய

ஸ்ரீமான் கோ. அ. திருஞான சம்பந்த செட்டியார்

அவர்கள் மாணவர்

ப. நா. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்களால்

இயற்றப்பட்டு

வணிக சங்கத்தவரால் வெளியிடப்பட்டது.

நைனியப்பன் தெருவு,

மதருஸ்.

3—10—1931

வும்
இ

உ

வாணிகமைந்தன் மலரடிபோற்றி.

நிஜவைசிய நிரூபண மறுப்புரை.

நண்பர்காள்! இதன்கீழ் குறிக்கப்பட்டவை யாவும் ஓங்கூர் சீ. இரத்தினசெட்டிக் கெழுதியதென்பதை யாவரும் அறியவும்.

பல்வளஞ் சிறந்த ப்ரபஞ்சத்தின்கண்ணுள்ள மனிதவர்க்கத்தில் ருதிஸ்மிருதி யிருகவுள்ள முதனூன் முறைப்படி ப்ராஹ்ம, க்ஷத் ரிய, வைஸ்ய, சூத்ர ரெனவரும் நால் வருணத்தவரும் அவரவர்கள் குலத்தையும் குலத்திற்குரிய சிறப்பினையும் தத்தமக்குத்தக்க சமய சந்தர்ப்பங்களில் பாராட்டிக்கொள்வது சகஜமே என்பதை ஏனையர் குலத்தின் வண்மையை யுரைக்கும் ஈட்டி யெழுபது ஏர் எழுபது சதகம் முதலிய காவியங்களால் அறியலாம். இஃது குலாபிமானத்தின் காரணத்தால் என்க. பொது மனப்பான்மை யுடையோரிதனை இவ்வள விகேமன மதிப்பதே மிகையாகும். பொருளர்களாயின் தக்க ஆதார முண்டோவென நன்காராய்ந்து அதன்வழி வாளாயிருப்பது அறிவாளிகளின் செயலாகும்.

உலக வாழ்க்கையை ஒரு சிறிதும் உணரப்பெறாத இவர் எம்மனோர் சம்பிரதாயத்தில் குறுக்கிட்டு விளிக்கவந்தது தமது உடலை ஆட்டுவிக்கும் கருவி இவரை ஏமாற்றமடையச் செய்ததுபோலும். ஏனெனில் அக்ஷரத்தின் இலக்ஷணமே அறியாயிவர் வாத் யமை பட்டம் பெற்றும் வாளாயிராமல் பண்டைய நூல்களை னர்த்தார்த்தம் செய்யப் புறப்பட்டு தமது அண்டு பிரசுரத்தில் தினோராவது நிகண்டு எட்டாவது செய்யுளில் (சக்கிரி குயவன் க்கான் நாபதி நெடுமால் பாம்பு) யென்பதற்கு செக்கான் சக் யென வெகு சுலபமாக மேற்புல்லை மேய்ந்துவிட்டு முன்பின் ன (குயவன் தாபதி நெடுமால் பாம்பு) யென்பதைப் பார்த் துள் பொருளை எதிர் நின்று கண்ணை இருட்டியதுபோலு

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

குயவன்செக்கான் அரசன் விஷ்ணுசேடன் ஆகியவர்கள்சக யுடையவர்கள் என்பதே அதன்பொருள். இதைத் தவிர்த்து மதறி யாமைக்கேற்படும் குதர்க்கப்பொருளைக் குறித்தெழுதியதை யுற்று நோக்குங்கால் நிகண்டில் ககரவெதுகையுடன் முடிவோ இவரகல்வி? நிற்க, நிகண்டு முழுவதும் தெரிந்திருப்பின் டகர வெதுகையும் தெரியலாம். அதிற் கூறியிருக்கும் செட்டி வாணிகன் செவ்வேளாம் என்பதையும் தெரிந்திருப்பார். செக்கா ரென்பதையும் வாணிக ரென்பதையும் பிரித்து இருப்பதையும் தெரிந்தாரில்லை. வாணிஜ வைசியராகிய வெங்களுக்கும் செக்காருக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதென்பதறியாது ஓலமிடும் இவர் நன்றாய் கவனிக்கவும். இம்முறையே மன்னிப்பு. மறுமுறை செக்காரென்று எங்களைச்சொல்ல முன்வருவாரேயாமாகில் அதற்குரியதை யனுபவிப்பர். நிற்க, செட்டனுட்டானத்தால் வணிகரையே செட்டியென காரணப்பெயரால் கூறப்பட்டதை மேலே கண்டிருக்கின்றபடியால் நன்கு அறியவும்.

சிலப்பதிகாரத்துள் வாணியர் பதமொன்றையும் காணோமென அந்தகார சிந்தையில் கூக்குரலிட்டும் வாணியனென பந்தனின் காவியத்துள்ளும் புறங்கூற முன்வந்துள்ளார். ஆகையால் இவர்க்கு கல்வி பயிற்சி யில்லையென்பதே தெற்றென விளங்குகின்றது. தவிரவும் ஷை பாசுரத்துள் வாணியர் பதம் ஒன்றும் காணப்படவில்லை யென்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். வாணியர் பதம் சொல் வழக்கா நூல்வழக்கா என்பதை அறியாது கண்ணீர்விட்டு எழுத முன்வந்தது மிகவும் விசனிக்கத்தக்கதே. (வாணியர் பதம்) எப்பதத்தினின்று திரிந்ததென்றுந் தெரிந்தாரில்லை. (அதற்குரிய தாதுவையுந் தெரிந்தாரில்லை) சிலப்பதிகாரத்துள் (மாசிலாத பெருங்குடி வாணிப) வென்பதையும் பந்தனந்தாதியில் (போதிவணிகேசன்) வென்பதையும் உற்றுநோக்கி உண்மையை கவனிக்கில் வாணிபன் வணிகன் வென்பதை சொல்வழக்கில் வாணியன் வெ வருவதையும் நூல் வழக்கில் வணிகன் வாணிகன் வாணி வாணிபன் வென்று வருவதையும் யேன் உணர்ந்திலர்? ஐயே பாவம்! கல்வி யில்லாதும் பகுத்தறியும் தன்மை யில்லாது வெளிவந்தனர் போலும். நூல் வழி மறுவும் சொல் வழ விலக்கிய இலக்கண விதியை நன்கறிந்து கூறக்கடாவுகின்றோம்

இதுகளை யெல்லாம் கவனித்தறியாது எங்களை இவர் வித் வணிக கருமம் துணிந்தபி னெண்ணுவமென்ப திழுக்கு

றும் வெகு சுலபமாக பாசுரத்தை விளக்கிக்காட்ட முன்வந்தார். அப்
பாசுரத்தின் கருத்து இவரை சார்ந்தா எம்மைச் சார்ந்தாவென்
பதை பேரறிவாளர்களை கேட்டுத் தெளிவாராக. இவர் யாவரென்ப
தைசற்றே கவனிப்போம். தற்காலத்தில் வழங்கிவரும். அச்சிருபாக்
கச் செட்டி பேரிச்செட்டி காசுக்காரச் செட்டி அறுபான் நான்கு
தலைக்கட்டுச் செட்டி. மளிகைச்செட்டி மூட்டைக்காரச் செட்டி
இன்னும் கூறப்பட்ட பலவித செட்டிகளில் செட்டி யென்னும்
பதத்தை கழித்துப் பார்க்கில் ஒரு ஜாதியெனவும் ஸ்திரமாய்
சொல்லவழியின்றி யிருப்பதைப்பார்க்க. (அச்சிறுபாக்கம்=ஓர்ஊர்
பெயர். பேரி=நகாரா இது முப்பத்திரண்டு வாத்தியங்களுள்
ஒன்று. காசுக்காரன்=பணக்காரன். 64-தலைக்கட்டு=ஓர் கூட்டம்.
மளிகை=வர்த்தகத்தானம். மூட்டை=வஸ்துக் குவியலை கவர்ந்த
உருவம் இப்படியே) உண்மைக் குலத்தைக் காட்டாது ஊரை
யுங் காசையும் தலைக்கட்டையும் வியாபாரத்தையையும் காட்டிக்
கொண்டு ஊரை ஏமாற்றுகின்ற இவரது உண்மைக்குலத்தை யுற்று
நோக்குங்கால் அநேக இடங்களில் இவர் மரபினர்களே செக்குத்
தொழிலைச் செய்வதாலும், வடதேசங்களில் தனிச்செட்டி ஜாதி
யில்லாதபடியினாலும் பிரதியாக தைலியென்னும் செக்கார் ஜாதி
யும் வணியாவெனும் யெமது மரபும் இன்று மிருப்பது நன்றே
விளங்கும். கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, சந்திரகிரி
இன்னும் பல விடங்களிலும் செக்கார் ஜாதிவேறாகவும் எமது
மரபு வேறாகவும் இருக்கின்றார்கள். சந்திர கிரியில் மாத்திரம்
செக்காரென்னுஞ் ஜாதிசுமார் 400-வீட்டுக்கு மேல் இருப்
பதையும் கவனிக்கதக்கது செக்கார் ஜாதிக்காதிபீடம். மல்லி
கார்ச்சுனம் அவர்கள் குல தெய்வம் மல்லிகேஸ்வரர். யென்
பதையும் நன்கு கவனியும் சென்னையிலும் இதைச்சார்ந்த சிற்சில
விடங்களிலும் தமது உண்மைக் குலத்தை மறைத்து தற்கால நாக
ரீகப்படி செட்டிபட்டத்தை வைத்துக்கொண்டு வியாபாரஞ்செய்வ
தினாலேயும் காலக்கிரமத்தில் அதுவே வழங்கி வந்துவிட்டன உண்
மைநோக்குங்கால் தாங்களே செக்காரென்பது தெரியவருகின்றது.
காரணம் யென்னே யெனில் (செக்காரென்ற ஜாதி இவ்வூரில்
இல்லாதபடியாலும் தனிச்செட்டி யென்னுஞ் ஜாதி உண்டாகாமை
யினாலுமறிக) சில ஆண்டுகளுக்கு முன் செக்கார் பட்டத்தை மண்
ணைத்தோண்டி மறைத்து தனிச் செட்டிப்பட்டம் கைக்கொண்டு

விட்டாரென நன்கு புலப்படுகின்றது. இப்பொழுது தனிச் செட்டிப்பட்டத்தை நழுவவிட்டு வணிகர் பட்டத்திற்கு வந்துவிடலாமென்று நோக்கி நிற்கின்றார். அதுதான் முடியாதகாரியம். ஏனெனில் வியாபாரத்தை முன்னிட்டு பற்பல ஜாதியர்களும் செட்டிபட்டத்தைக் கையாண்டு வந்துவிட்டார்கள். ஆனால் ஜாதியில் நழுய இடந்தாரென்பதை யாவருமறிவார்கள். உண்மையில் இவரது பஞ்சபூத சாக்ஷியாய் நன்கு கவனிக்கில், குலமில்லாதபடி தனிச் செட்டி யென்னும் பட்டம் வருமா வந்ததற்குக் காரணம் யென்னவென்றும் கவனித்தால் அப்பொழுதுதான் இவருக்கு உண்மை புலப்பட்டு ஆதியில் காம்தாம் செக்காரென்பதும், வியாபாரச் சேர்க்கைவாசனையினால் செட்டியென்று மேற்பட்டிருக்கலாமென்றும் இவரது ஆழ்ந்த கருத்தில் நன்கு விளங்கும். இதுவே இவருக்கு போதுமான அத்தாக்ஷியென்று நினைக்கின்றேன். ஆகையினால் நீங்களே செக்காரென்பது நன்கே விளங்குவது இன்றே அறிவீரென அறிவுறுத்துகின்றேன். வாணியர் வரலாறும் (இதுவும் தவிர பொறுமை பலனும் கீழ்காண்க.)

ஓங்குவல்லாளி வழோங்கூரதனை
நீங்கியே வாழும் நெறிகொளும்பெரியாய்
அரிதிலுமரிய மானுட ஜன்மம்
தன்னைத் தானடைந்தும் நீதகுதிலா
பிறரின் கல்விசெல்வத்திற் பெரிதும்
பொறுமைக் குணமேன் பூண்டலைகின்றாய்
மகிழிலாபொறுமை நீ மனத்திடைக்கொள்ளல்
வரும்பயன்யாது வாய்மலர்ந்திடுவாய்
வாலைக்குமான் வாணிபக்குமான்
ஞாலம்போற்றுஞ் ஞானக்குமான்
கும்பாபிடேகங்கூறு முகத்தில்
எங்கள் பெருமையை எடுத்தே உரைத்தோம்
ஏனோ உனக்கு யெழுந்தன பொறுமை
வீணான பொறுமையில் வெற்றி கொள்வாயோ
அதுதானில்லை அதுதானில்லை
பொறுமை யென்பது போராய் முடியும்
என்பதையேனோ இதுகாறுணர்ந்திலீர்

உனக்குமுன்னே உமதுகுலத்தே
வுதித்தபெரியரில் ஒருவருங்காணோம்
பண்டைநாள் நாட்டைப் பரிபாலித்த
மன்னருட் சிலர்தம் மனத்துறு பொறுமையால்
இன்னலுற்றன ரென்றிதிகாசங்கள்
செப்பியமாற்றம் செவிமடுத்திலையோ
துரியோதனன்றன் துர்க்குணப்பொறுமையால்
பஞ்சபாண்டவரை வஞ்சகஞ்செய்துபின்
அடைந்திடு கதியைநீ அறிந்திலாய் கொல்லோ
ஒப்பிலாப் புலவராம் ஒட்டக் கூத்தர்
சீர்புகழேந்தியால் செலுத்திய பொறுமையால்
அரசசபையில் அவமானத்தை
வுற்றனரிதைநீ வோர்ந்திலாய்கொல்லோ
பொறுமைக்குணத்தைப் புகலுங்கதையோ
விரியுமறிஞரை வினவிநீ யறிவாய்
ஓங்கூர் நீங்கி உயர்சென்னைவந்த
ஓங்கூராரே ஓங்கூராரே
உன்னுடை வழிதனை வுரைத்தனம் முன்பு
என்பதாலே இத்துடன் நிறுத்தி
எங்கள் ஜாதி எற்படும் வழியை
தாதுவின் மூலமாய் தக்கோர் சரிபெற
சொல்வேன் கேளாய் சொல்வேன் கேளாய்
வணிஜ்ஜெனுந் தாது வணிஜனாயின
வணிஜ னென்பது வாணிஜனாயின
வாணிஜ னென்பது வாணியனாயின
இன்னுஞ் சொல்வேன் இன்பமாய்க்கேளும்
வணிக்கெனுந் தாது வணிகனாயின
வணிக னென்பது வாணிகனாயின
வர்ணிக னென்பவை வாணியனாயின
இதுநாள் மட்டும் இதையுபதேசம்
ஏனோ கற்றிலீர் ஏனோ கற்றிலீர்
அரைகுறைகற்று ஆபாசவழக்கை
அன்புடன் இயற்று மன்பிலாதவரே
இனிமே, லாகிலும் இழுக்குவார்த்தையில்

இசையு மனத்தை யினிதுடனிருத்தி
துன்பந் திருமித் துர்க்குணம் விடுத்து
காந்தியடிகளின் காங்கிர சடைந்து
ஈசனடிதனை யென்றும் நினைத்து
போற்றித் துதித்துப் பொல்லாப் பவவினை
மாற்றி யாவரும் மதித்திடவாழ்வாய்

யென இத்துடன் நிறுத்துகின்றேன். நிற்க நிஜ வைசிய நிருபணத்தை நிர்த்தூளிசெய்ய ஆற்றல் தந்த எமது குலத்தலைவரும் வணிகமித்திரன் பத்திராதிபருமாகிய K. A. திருஞான சம்பந்த செட்டியாருக்கும், அவர் தம் மாணவரில் ஒருவராகிய ப.நா. கிருஷ்ணசாமி செட்டியாருக்கும் மனமார்ந்த வந்தனம் செய்தனம். நிற்க, நிஜ நிரூபணத்தை இவ்வாணிஜ வைசிய விளக்கச் சூறுவளியெனும் கசைகொண்டடித்து முடுக்குவான்வேண்டி இதனை வெளியிட்டாராதலின் சிற்சில பிழைகள் இருப்பின் அம்ச பாவனைப்போல் அன்பர்கள் க்ஷமிப்பரென கருதுகின்றனம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்

வக்குவமரபில் வந்ததசாங்க விசேட விருதுளுடைய
வணிக வைசிய ஆயிரவர்களில்
கலவை. பரமசிவ செட்டியார்.

மதிப்புரை.

வணிக வைசிய விளக்கச் சூராவளி என்னும் அரும்பெரும் புத்தகத்தைக் கண்ணுற்றேன். அதில் வரைந்துள்ள வேத, ஸ்மிருதி, புராண, இதிகாசங்களும், பஞ்சகாவியங்களும், இலக்கணத் துறையிலாழ்ந்த பண்டை யாசிரியர் கருத்தையுந்தழுவி சொற்சுவை பொருட்சுவை பொருந்தி இருக்கின்றன. இதில் ஸ்ரீவக்குல முனிவர் தவபலத்தாலுண்டான சகஸ்திர மக்களைப்பெற்று, அம்மக்களை வளர்ப்பதற்கு வாணி-அயன் இருவருங்கூடி வளர்த்தமையால் (வாணி=அயன்) வாணியரெனப் பெயரிட்டு, நகரங்கள் தோறும் குடியேற்றி ஆங்காங்குள்ள மன்னவர்களால் வாணியர்பாடி என்றும், வாணியர் சாவடி என்றும், வாணியர் நகரம் என்றும், வாணியர் வாளையமென்றும் பலவிதமான நகரங்களை இவர்களுக்குச் சன்மானமாகக் கொடுத்து தசாங்க விருதுகளும் அளித்து வாணிப முறையில் வழாது வாழ்ந்த பெருமையையும் நன்குத் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறது.

வாணியர்களே வைசியர்களென்று சுமார் 30 வருடத்திற்குமுன் ஜாதிக்கலகத்தில் எனது தந்தையாரான மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ கோவளம் அப்பாசாமி செட்டியாராலும், வித்வான் கோவிந்த செட்டியாராலும் நிச்சயப்படுத்தி யிருக்கிறார்களென்பதும், தற்போது சுமார் 20 வருடங்களுக்குமுன் தென்னிந்திய வணிக வைசிய சங்கத்தை ஸ்தாபித்த நமது குலத்தோன்றலாய் விளங்கும் பரோபகார தற்பரரென்று பல்லோராலும் கொண்டாடப்பெற்ற பெஸ்ட் அண்டு கம்பெனி துவிபாஷியாயிருந்த ராவ்பகதூர் ஸ்ரீமான் சபாபதி இரத்தினவேல் செட்டியார் அவர்களாலும், செங்கற்பட்டு, சி. சிங்காரவேல் செட்டியார் அவர்களாலும், முதலாவது மகாநாடு சென்னையம்பதியில் புரசையில் கூடினக் காலத்து ஏராளமான வணிகர்க் குழாங்கள் கூடி விமரிசையாய் நடந்ததை உலக மறிந்ததே. இரண்டாவது மகாநாடு திருநெல்வேலியில் கூடின காலத்து தென்னிந்திய வணிகர் கூட்டத்தில் தலைமைவகித்த சென்னை ஐகோர்ட் வக்கில் S. வேணுகோபால் செட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் செவ்வனே நடந்த தென்

ப்பதை யாவரும் அறிந்ததே மூன்றாவதாக என்னாட்டிலும் சிறந்நாடாய் விளங்கும் தொண்டை நாட்டின் கண் சிறப்புற்றோங்கும் காஞ்சியம் பதியில் கூடிய வணிகர் மகாநாட்டில் தலைமைவகித்த ஸ்ரீமான் பெங்களூர். நமசிவாய செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்ததை யாவரும் அறிந்ததே.

இப்போது 3-வது ஆண்டுக்கு முன் பாண்டியரிருந்து பரிபாலனஞ்செய்த முத்தமிழ் பயிலும் நற்றவமுடைய கன்னி நாடென வழங்கும் மதுரையம் பதியில் டெல்லி சட்டசபைத் தலைவரால் ஸ்ரீமான் R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் செவ்வனே நடைபெற்று அனேக தீர்மானங்கள் நிறைவேறி கையாளப்பட்டு வருகிறதென்பது சகலரும் அறிந்ததே. இவ்வணிக வைசிய சங்கத்தை பரிபாலனம் செய்து வரக்கூயவர்கள் R. இரத்தின சபாபதி செட்டியார் O.C. இராஜு செட்டியார். ஆனரரி மாஜிஸ்ட்ரேட் C. சாம்பசிவ செட்டியார் முனிசிபல் சேர்மேன். காஞ்சி. V. சம்பந்த செட்டியார் B.A, B.L, அட்வகேட் மதராஸ், S. பூபதி செட்டியார் B.A, B.L, அட்வகேட் மதராஸ். A. சோமசுந்தரஞ் செட்டியார் M.A. R. V. இராஜ ரத்தினம் செட்டியார் தமிழ் வித்வான். இன்னும் பல பிரபலஸ்தர்களும் உலகமறிந்த விஷயம். என்பது மகாநாடு கூட்டங்களும், சங்கங்களும் நிலைநிறுத்திய இன்னோரின் குலாபிமானத்தையும், பெருமுயற்சியும் என்றும் மறவாது மனத்திடையே வளருகின்றது.

இவ்வரிய பெரிய வணிக வைசிய விளக்கச் சூராவளியை எனது முன்தோன்றலின் மாணவர் முயற்சியால் எழுதி வெளியிட்டதைப் பார்க்கப்பார்க்க எனக்கு ஆனந்த முண்டாகிறது. இப்புத்தகம் நம்மவர்களுக்கு இன்றியமையாத ஒரு பொக்கிஷமாகும். ஒவ்வொருவர் கரத்திலும் இருந்தே தீரவேண்டியது என்பது எமது கருத்து. இன்னும் இவைபோன்ற அநேக நூல்களும் காவியங்களும் இயற்றி உலகிற்குப் பயன்தருமாறு எல்லாம் வல்ல ஸ்ரீ வாணிய மைந்தன் மலரடியை மனமார வாழ்த்துகின்றனம்.

இங்ஙனம்

கோ. அ. சிவசங்கரஞ் செட்டியார்,

தமிழ்ப் புலவர், சென்னை.

உ

வாணிய மைந்தன் துணை.

நிஜவைசியர் நிருபண நிர்த்தூளிதமும் வாணிய வைசிய விளக்கச் சூராவளியும்.

நண்பர்காள்!

திண்டிவனம் தமிழ் உபாத்தியார் ஓங்கூர் சி. இரத்தின செட்டியாரெனக் கைச்சாத்திட்ட நிஜ வைசியர் நிருபணம் என்னு மாபாச துண்டுப் பத்திரிகையொன்று கைவரப்பெற்றேன்.

அந்நிருபணத்தில் (1) திருஞான சம்பந்த வள்ளலார் வைத்தியசாலை நெ 8, அஷ்டபுஜம் ரோட்டு சூளை மதராஸ்..............

....

பா. முருகேச செட்டியாரால் எழுதி வெளிவந்த பத்திரிகையின் முதலில், "இதனால் சகலமான வணிக வைசிய ஆயிரவர்களாகிய நம்மவர்கட்குத் தெரிவிப்பது" என்றெழுதியதையும், (2) ஸ்ரீ முத்துக்குமாரவே ளடியார்க்கடியரான, P. S. வேலாயுத செட்டியார் அண்ட் சன்ஸ், தர்மகர்த்தர்கள், எண்ணை மிஷின், மிண்ட் பில்டிங் மதராஸ், என்ற அட்ரஸையுடையவர் சென்னை முத்தியாலுப் பேட்டை நைனியப்பன் தெருவில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முத்துக்குமாரவேளுக்குப் பிரஜோத்பத்தி ஆவணிமீ 14உ மகா கும்பாபிஷேகமென்றெழுதி அதன்கீழ் வக்குவ மரபினர் ஆயிரங்கோத்திரத்தவர், இப்பர், கவிப்பர், பெருங்குடியர், தசாங்கமுடையார், மன்னர் பின்னோராகிய செட்டிகளென்ற மூன்றுங் குலத்தவர் என்றும் (1) கண்ணகி (2) காரைக்காலம்மையார் (3) இயற்பகையார் (4) மூர்த்தியார் (5) அமர்நீதியார் (7) பட்டினத்தடிகள் (10) பத்தனர் (11) மாமனுக சந்தனரும், ஹேமனுக சந்தனருமான இவ்

னொன்பது சரித்திரத்தவரும் (தங்கள் செக்கார் குலத்திலுதித்து) தங்கள் குலத்தைச் சிறக்கச் செய்தாரென்றும், மனங் கூசாமல் எழுதியதையும் பார்க்க ஆச்சரியத்திலுமாச்சரியமே” என்று தமது மனம் போனபடி ஆபாச வழுக்களை நிறப்பி வெளியிட்டு மகிழ்வதை நோக்க இவரது கல்வியின் பெருக்கத்தைப் பலருக்குங் காட்டி பொறாமையே திருமேனியாகக் கொண்டு விளங்கும் புண்ணிய சீலரெனத் தெற்றென விளங்குகின்றது. இவர் (தங்கள் செக்கார் குலத்திலுதித்து) என்னு மெழுதாப் பொய்யை வரைந்து அக மகிழ்வது பள்ளிச் சிரார்களின் கூற்றெனப் பளிங்குபோல் காட்டுகின்றது, இச் சி. இரத்தின செட்டியாரிதுகாறும் போலி வைசியராக விருந்ததை யாற்றாது இந்த இரண்டு பத்திரிகைகளைப் பார்த்து பொறாமை மிகுதியால் மனம் புழுங்கி தாம் நிஜ வைசியராவதற்குப் புறப்பட்டனர் போலும். உண்மை யெவ்விதத்திலுமுண்மையே. இவராக நிஜ வைசியர் தானே யென்று வெளிவரின் அது நிஜமாகுமோ ஒருக்காலும் நிஜமாகாது ஆகாது. வைசியரென்னும் பதத்துக்குப் பொருளின்னதென்று தெரிந்திருப்பின், இவ்வளவு சுறு சுறுப்பாகக் கிளம்பியிருக்க மாட்டார், பிராஹ்மணர், க்ஷத்திரியர், வைஸ்யர், சூத்திரர் ஆகிய நான்கும் தமிழ் மொழியோ அல்லது வட மொழியோவென்பதைச் செவ்வனே யாலோசித்தல் வேண்டும். அவ்விதமாலோசிக்க இவருக்கு அவகாச மில்லாது போனது இவர்மேற் குடிகொண்ட பொறாமை யென்னும் பூஷணமிவரது பிடர் பிடித்துந்தியதென்க.

பிரஹ்மக் ஞானந்து=பிராஹ்மண: க்ஷாத்ரதீயந்தி=க்ஷத்ரிய விடுவிஸ விஸஹ: வைஸ்ய: சோதிதை தீதிஹி=சூத்ர:

யென்னுஞ் சம்ஹாஸ்யத்தை வான் முறையாகத் தெரிந்திருப்பாராயின் அடங்கியிருப்பார்.

சாதாரணமாக வைசியர் என்னும் வடமொழிப் பதத்திற்கு வாணிஜர் (வாணியர்) என்றும் வாணியர் என்னும் தமிழ்ப் பதத்திற்கு வைசியர் என்றும் அர்த்தம். வைசிகை யென்னும் அஃறிணைத் தொழிற் பெயரானது வைசியரென உயர்திணைத் தொழிலாகு பண்புத்தொகையாய்க் கர்த்தாவின் பெயராயிற்று.

வாணிஜ என்னும் வடமொழி வாணிய என நன்னூல்பதவியல் 20-வது சூத்திரம்,

"எழா மூயிரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வும் முதலு
மெட்டே யவ்வும்"

என ஜகரம் யகரமாய்த் திரிந்தது.

கஜம்=கயம் அம்புஜக்=அம்புயம் அரசன்=அரயன்

வாணிய=வாணிக இதில் யகரம் ககரமாய்த் திரிந்தது.

வாணியம்=வாணிகம்	வாணியம்=வாணுபம்
வாணியர்=வாணிகர்	வாணியர்=வாணுபர்

அன்றியும் வாணிகர் என்ற பதம்.

"ஒரு மொழி மூவழிக் குறைதலுமனைத்தே" எனக் ககர மெய் கெட்டு இ ஈ ஐ வழியவ்வுமென யகரவுடம்படு மெய்பெற்று வாணி+ய்+அர்=வாணியரென்றாயிற்று.

வாணுபர் = வாணுவர். உபாத்தியாயர் = உவாத்தியாயர். பாபம்=பாவம், தபம்=தவம் எனவரும் வடமொழிச் சிதைவு இஃது மணிமேகலை ஆபுத்திரன் திற மறிவித்த காதை பக்கம் 116ல்

"வாரணசியோர் மறையோம்பான்
ஞாண வுவாத்திய பஞ்சிகனென்போன்"

என விதந்தோதியது நன்கு விளங்கும். இன்னும்.

"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி"

எனுஞ் சூத்திரப் பிரமாணப்படி வாணிகர் வணிகரென குறுக்கல் விகாரம் பெற்று வாணியரையே வைசியரென ஸ்தாபித்தது. வைசியர், வாணியர், வாணிஜர், வாணிபர், வாணிகர், வணிகர், இளங்கோக்கள், மன்னர்பின்னர், இப்பர், கவிப்பர், பெருங் குடியர், எட்டியர், நாய்கர், ஆன்காவலர், பாதர், சிலேபியர், தோன்றியர், தருமக் கிழவர், அணிகர், தேசிகர் முதலிய சொற்கள் ஓர் பொருட் கிளவி யென்பதை யுணர்வீராக. பண்டைய அகாதியில் வைசியர்=வாணிகர். மூன்றாம் வருணத்தார்.

வைசியர் மூவர்=இப்பர், கவிப்பர், பெருங்குடியர் எனு மூவகை வணிகர், வாணிஜர்=வாணிபர், வியாபாரி,

வாணிஜ்யம்=வாணிகம், வாணியம்=வாணிகம்

வாணிபர்=வாணிகர் வாணிபர்=வாணியர், செட்டிகள்,
வியாபாரிகள்=வாணியக்=செட்டு
வியாபாரம், வாணிகம்=வியாபாரம், இலாபம்
வாணிகன்=செட்டி, வாணியன், வியாபாரி.

இளங்கோக்கள் இப்பர் கவிப்பர் பெருங்குடியர் எட்டியர் நாய்கர் வணிகர் ஆன்காவலர் பாதர் பிலேபியர் செட்டியர் தோன்றிகர் தருமக்கிழவர் தனிகர்	வைசியர், செட்டிகள்

செட்டி=குமான், ஜட்டி, வாணியர், வைசியர்.
தேசிகர்=வாணிகர்.
வாணிச்சி=செட்டிப் பெண்.
செட்டிச்சி=செட்டிப் பெண், வாணிச்சி.
கோமுட்டி=ஒரு ஜாதி.
காசுக்காரன்=பணக்காரன் என வரையப்பட்டிருப்பதை யுற்று நோக்கி யடங்குவாராக.

இவர்போன்ற சிலர் (செட்டு) வியாபாரம் என்னும் உரை கொண்டு வியாபாரத் தொழில் செய்யுங் காரணம்பற்றி வெள்ளாஞ் செட்டி, சோழபுரத்துச் செட்டி, தனுக்காட்டுச்செட்டி, திருப்பூண் டிச் செட்டி, அறுபத்து நான்கு தலைக்கட்டுச் செட்டி, தமிழ் வியா பாரச் செட்டி, தெலுங்கு வியாபாரச் செட்டி, மஞ்சக்காரச் செட்டி, கவரைச் செட்டி, கோமுட்டிச் செட்டி, பேரிச் செட்டி நாட்டுக்கோட்டைச் செட்டி, சோழியச் செட்டி, மஞ்சப்புத்தூர் செட்டி, வக்காமணிச் செட்டி, அரைமணிச் செட்டி, தவாங்கச் செட்டி, மணிகைச் செட்டி, காசுக்காரச் செட்டி, பம்பாய் செட்டி வங்காளச் செட்டி, வளையல் செட்டி, முதலிய செட்டிகள்தாம் தாங் களே வைசியர்கள்.

வேறு வைசியர்களுலகிற் கிடையாது என்று கூறுவதை யுற்று நோக்குமிடத்து பூனை கண்மூடி பூலோகமிருண்ட தென்னுங் கதை யாக முடியும். இன்னும் எத்தனை செட்டிகள் வந்து கூறின போதி லும், அந்த செட்டி என்னும் பதத்தை எடுத்துவிட்டால் மிகுந்த பதம் ஒரு வருணத்தையாவது, ஜாதியையாவது குறிக்க சக்தியில் லாமல், நகரம், தலைக்கட்டு, பாதை, மணி, மனிகை, மாளிகை என் னும் அர்த்தத்தைக் காட்டுமேயல்லது வைசிய ரல்லது வாணிய ரென்னுமர்த்தத்தை ஒரு சிறிதுங் காட்டாது. இன்னுமிவர்களே சுருதி, ஸ்மிருதி, புராணங்களிலுங்கூட வைசியரென்றாவது, வாணி யரென்றாவது கூறியதுங் கிடையாது.

இவர் காட்டிய சூதசம்ஹிதை ஜாதி வலாறுரைத்த அத்தியா யத்தில் (வைருவி காய்கர் மாதருட னுதித்தனர்) என்னும் பாசுரத் தையுற்றுநோக்குழி பிரம்மாவின் தொடையில் காய்காரிய வாணியர் களுதித்தார்களேயல்லது, பேரிச் செட்டிகளும், காசுக்காரச் செட் டிகளுமுதித்ததாகக் கூறப்படவில்லை. அன்ன மிவ்வேங்கூரார் பிரம்மதேவனது இடது தொடையிலுதித்தவரா அல்லது வலது தொடையிலுதித்தவரா? இவ்விருதிறத்துச் சகோதரர்களுதித்த தொடை யின்னதெனத் தெளிந்த பிறகல்லவோ தாம் வைசியரென்று வெளிக்கிளம்ப வேண்டியது.

புருஷ சூக்தத்தில் "பிராம்மணோ சொம்க மாஸீத் பாஹூ ரா: ஜன்யக்ருத:
ஊருததஸ்ய: யத்வைஸ்ய: பத்பியாம் சூத்ரோயஜாயாத:—"எனவும்

"நான்முகன் படைத்த நால்வகைச் சாதியுள்
— — — — —
— — — — —
தொடையிலுதித்த தொல் வாணியரும்" எனவும்,

"வேதியர் முகத்தில் வேந்தர் விறல்கெழு துணைத்தோள் வெற்பிற்
தீதில் வணிகர் செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர்செய்ய
பாத பங்கயத்தி லின்றுன் பதுமன்முன் பயந்தமுவ
ரோதிய மகங்களியாவு மாற்றுதற் குரியராவார்"

எனக் கூர்ம புராணம் வருணாச்சிரமமுரைத்த வத்தியாயமும்,

ஊரோர் லைஸ்யவரச் சாத்சித் வாக்மிசாம மஹமனே
சிகாயக்ஞோப விதாத்ய: கடதண்ட த்ரிபுண்ட்ரவான் ||
சாணுப்யாம் தத ஹஸ் குத்ரயுகலாங் கலவாம், முஸே
லலாட விலசத் புண்ட்ர சப்யதோ வேதவித்ம:

எனும் ஸம்ஸ்கிருத வைசிய புராணமும்,

வைசிய புராணம்.

"சீரார் புரிநூலுந் தெண்டு கமண்டலமு
மோரார் சிகையு மிலங்கு மெழில் வக்குவனும்
போரானை யூருவினிற் பெற்றான் பிரமனுயர்
காரான ரானோர் கமலபதத் துதித்தார்"

எனவும் போந்த பிரமாணப்படி வைசியர் வாணியரென்பதே தேற்றம்.

"ஸர்வஸ்யாஸ்ய துலர்க்கஸ்ய-குப்தியர்த்தம் ஸம்ஹமுத்தி மதி:
முகபாஹு ருபஜ்ஜாநாம்-பிரதர்க்கர்மாண்ய கல்பயத்"

என மநு முதல் அத்தியாயம் 87-வது சுலோகமும்,

"பசூநாம் ரக்ஷணந்தாந-மிஜ்யாத்ய யநமேவச:
வணிக பதம் குஸீதஞ்ச-வைஸ்யஸ்ய கிருஷிமேவச:

என 90-வது சுலோகமும்,

"லாப கர்ம ததா ரத்நங்-கவாஞ்ச பரிபாலநம்:
கிருஷி கர்ம சவாணிஜ்யம்-வைஸ்ய விருத்திருதா ஹிருதா:"

என பாரசர் ஸ்மிருதி ஆச்சார காண்டம் 91-வது சுலோகமும்,

"ஸ்வாத்யா யோயஜ நந்தானம்-பசூநாம் பாலநத்தத:
குஸீதக் கிருஷி வாணிஜ்யம்-வைஸ்ய கர்மாணி ஸப்தவை"

என பிரகற்பதி ஸ்மிருதியும்,

"குஸீத கிருஷி வாணிஜ்ய-பாஸு பால்யம் விஸ ஸ்மிருதம்"

என யாக்ஞ வற்கிய ஸ்மிருதியும்,

"ஸ்வாத்யாயம் யஜநந்தாநம்-குஸீதம் பசுபாலநம்
கோரக்ஷாங் கிருஷி வாணிஜ்யம்-குர்யாத் வைஸ்யோ யதாவிதி"

என வராக புராணமும்,

"தாநமத் யய நம்யக்ஞோ-வைஸ்யஸ்யா பித்ரி தைவஸ்ஸா
வாணிஜ்யம் பாஸு பால்யஞ்ச-கிருஷிஸ் சைவாஸ்ய ஜீவிகா"

என மார்க்கண்டேய புராணமும், பிரதிபாதித்தபடி எங்கள் வாணிய வைஸ்யர்களுக்கு தானமீதல், வேதமோதல், வேள்வி செய்தல்

வாணிபம் புரிதல், பசுநிரைக் காத்தல், உழுவுத் தொழில் புரிதல் ஆகிய அறு தொழிலில் முன் மூன்றும் வைதிக கருமமாகவும் பின் மூன்றும் ஜீவன விருத்தியாகவும் கூறப்பட்டு அறு தொழிலாளர் என்ற பெயரையுடன் கொண்டுள்ளார்.

"வணிகர் தஞ் செய்தி கூறின் மகவினை யாற்ற லோத
லுணர் வுடையவர்க்குத் தானமுதவல் வேளாண்மை யோம்பல்
தணிவில் வாணிகத்தா லீட்ட லானினந் தழைப்பக் காத்தல்
துணிவுற மிவை மற்றன்னோர் செய்வன தொகையென்னுய்"

எனக் காளத்தி புராணம் 11-வது வருணச்சிரம தருமமுரைத்த வத்தியாயத்தானும்,

"ஓதல் புரவி மகமுதல் வேள்வியாற்றலம ருடற்ற
வீதலாசர் தொழியல்பிற் கொடுத்த லோதன்மகமியற்ற
நீதிழுழவு வாணிக மானளித்தல் வணிகர் செயலடுதல்
கோதின் றேவல் செயல்பாக வெச்சம் பின்னோர்க்கெனக் குறித்தார்'

எனக் கூர்ம புராணத்தானும்,

"படைகுடி கூழமைச்சப் பற்றிய நட்பினேடு
நெடுமதி லரசியர்க்கு நிகழ்த்தியவாறு பேத
மிடையற வோதல் வேட்டல் வேளாண்மை வாணிகத்தி
னுட னிரைகாத்த லேரையுழலாறும் வைசியர்க்காமே"

என சூடாமணி நிகண்டானும்,

"உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்தொழில் வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழிற்கண் வேளாளர்க் கென்பவே"

வேறு.

"மகந்தனைப் புரிதன்மிக்க மாமறை யோதலீதல்
செகந்தனை யொளிசெய்வித்தன் சரக்கொடு மணிபொன்வெள்ளி
யுகந்து வாணிபங்கள்செய்த லுழவொடு பசுக்கள்காத்த
லகத்தையில் வணிகர்தங்க ளறுதொழிலாகு மன்றே."

எனப் பகவத் கீதையானும், (ஈண்டு செகந்தனை யொளி செய்வித்தல் சரக்கு விற்றல் காரணம்பற்றி வணிக சூரியர் வணிகாதித்தர். இரவிலெழு மாதித்தர் எனப் பெயர் வந்தமை மாமனாக வந்த திரு விளையாடலைப் பார்க்க.)

"சொற்போர்புரிவர் நான்மறையா ரங்குழுணர்ந்த தொழுகுலத்தோர்
விற்போர்புரிவர் நெடியசிலை யிராமனனைய விறல்வேந்தர்
பொற்போர்புரிவர் பிறபொருளுந் தம்போற்பேணிப் புரிவணிகர்
நெற்போர்புரி வார்நகரில் வேளாண்குலத்து நெறியாளரே"

எனும் பிரபுலிங்க லீலையானும் நன்கு விளங்கும். இங்கே வியாபாரம் செய்யும்படியானவை, இரத்தினம், முத்து, பவளம், லோகம் வஸ்திரம், உப்பு முதலிய இரசவர்க்கங்களும், அரக்கு, தினை, தேன், கருந் தினை, நாவி, மயிற்பீலி முதலிய காடுபடு திரவியங்களும், செந்நெல், சிறுபயறு, செவ்விளநீர், செங்கரும்பு, வாழை முதலிய நாடுபடு திரவியங்களும், "தக்கோலந் தீம்பூத்தகை சாலிலவங்கங் கற்பூரஞ் சாதியோடைந்து" எனுமலைபடு திரவியங்களும், எள், தோல், பசு, குதிரை முதலியவற்றினை ஆவணித்திருந்த வைசியராயினும் அவர்களிடத்து அம் முயற்சியின் பொருட்டு நின்ற மற்றையர் யாவராயினும் விற்றல் கொள்ளல் வேண்டும்.

"திலசர்மபலாஸ் சைவ விக்ரேயா: பசவோதிச:
வணிக் பதமுபாஸீ கைர்வஸ்யர் வைஸ்யஸ் இதிதாபி:"

எனும் அநுசாசன பர்வங் கூறியதினாலும்,

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந்தம் போற் செயல்"

எனுஞ் செந்நாப் புலவர் வாக்கானுந் தெளிவுடைத்தாம்.

"......................................நல்வணிகன்,
கண்டுவெந்து கூறக் கனவினருட் சித்தருவன்
கொண்டுவந்து காடெறிந்துகோ நகர்"

"தென்னன் குமரன்திரு முடிக்கு வாணிபராய்
நன்மணிகள்விற்ற நலம் போற்றி"

"......................................நல்வணிகன்
மாமனெனவந்து வழக்குரைத்து ஞானியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி"

எனப் போற்றிக் கலிவெண்பாவானும்,

"இம்மா நகருள்ளா ளொருவணிகன் றனபதியென்
றம்மா நிதிக்கிழவோன் மனைகுண சாலினியனையார்
தம்மாதவப் பொருட்டால் வெளிற்றறிவா ளரைத்தழுவும்
பொம்மா சுதவினன் போலவதரித்தா ளொருபுத்தேள்"

"வன்றான் மழவிடையாயவன் மணிவாணிகனாம
னென்றாலவன் கேட்டெங்ஙன மிப்பாடலிற் கிடக்கு
நன்றானவுந் தீதானவு நயந்தாய்ந்த தன்றன்மை
குன்றாவகை யறிவானென மன்றாடிய கூத்தன்"

"மல்லார் தடம்புயவாணிக மைந்தன் றனக்கிசையச்
சொல்லாழமும் பொருளாழமுங்கண்டான் முடிதுளக்காக்
கல்லார் புயம்புளகித் துளங்களி தூங்குவன்கலக
மெல்லா மகன்றிடுமுங்களுக்கென்றாலயஞ் சென்றான்"

"பின்பாவலரெல்லாம் பெருவணிகக் குலமணியை"

"குலவுமப் பெரும்பதியிளங்கோக் களிலொருவ
னில வுமாநிதிபோலருச்சனை முதலியதி
பலவுமாஞ் சிவதருமமுந்தேடுவான் பரன்பாற்
றலைமைசான்ற மெய்யன்பினான் றனஞ்சயனென்பான்

"செல்வமாநகரிருந்து மேற்றிசைப் புலஞ்சென்று
மல்லல்வாணிகஞ் செய்துதன்வளம்பதி மீள்வான்"

"புண்டரம்பயிலன் புடைப்புண்ணிய வணிகன்
வல்லை வாணிகஞ்செய்து நான்வருவழிமேலைக்" எனவும்

மாமனாகவந்து வழக்குரைத்த படலம்.

"தேமனுண்முல்லைத் தீர்ந்தார்ச் சிறுதகைவணிகற்காக"

"கன்னி நான்மாடக்கூடற் கடிநகர்வணிகமாக்க
டன்னின் மாநிதிக்கோனன்னான் றனபதியென்னும்பேரான்"

"மங்கல மாட மோங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்காஞ் சிரமேற் கூப்பி மாணிக்கர் தேற்றிவிற்கு
மெங்குல வணிக ரேறே"

"தவலருஞ் சிறப்பி னான்ற தனபதி வணிக ரல்ல
ரிவரென வவையங் கேட்ப விருகையும் புடைத்து நக்குக்
கவளமா னுரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமா
னவரவர் குடிப்பேர் பட்டங் காணிமற் றனைத்துங் கூறும்"

"செம்மலென் றறிந்து நாய்கச் சிறுவனுக் குவகை தூங்க" எனவும்

வன்னியுங் கிணறு மிலிங்கமு மழைத்த படலம்.

"யாவருமுவப்ப வின்புற்றிருந்த னனிளங்கோமன்னன்"

"தன்பெருந் தனமு மாம னீட்டிய தனமு மீட்டி
மன்பெரு நிதிக்கோ னென்ன வாணிபம் பெருக்கி நாய்கன்"

எனவும்

வளையல் விற்றபடலம்.

"செல்வநல் வணிகரொஞ் செங்கைக்கேற்பன
நல்வளை தெரிந்திடுமென்று நாய்கர் முன்"

"கருவின் மாதராகி நாய்கர் கன்னிமார்கள் மின்னுவேற்"

என்வும்

சான்றழைத்த திருவிளையாடல்.

" வருத்த மறவனர்கின்ற கன்னிதன்னை மதுரைநகரிருப்பானோர் மருமகற்குப்
பொருத்தமுறக் கொடுப்பலென
வருதியிட்டுப் பொருவிலருங் குலவணிகன் விருத்தனாகித்
திருத்தமுடை மனைவியொடு மரித்த பின்னர்ச்செட்டிகளாங்
கவற்கான கடஞ் செய்தஞ்சி
விரித்துமகழ் செய்தியெல்லாந்தோன்ற வோலைவிரை
விலவன் றனக்கெழுதி விட்டார்கட்டி"

எனவும்

பந்தனந்தாதி.

"சீரமதி வெண்கவிகைத் தேர்வேந்தர் பின்னென்றும்
போதிவணிகேசன் புகார்ப் பந்தன்—சாதிபோ
லென்னுஞ் சமயமுனவோ வெதிராக
மண்ணில் வருஞ் சமயமற்று"

எனவும் போந்த பிரமாணங்களால் வைசியர் வாணியர்களே யல்லது வேறில்லை யென்று நன்கு ஸ்தாபிக்கப்பட்டு இவாது நிஜ வைசியர் நிரூபணம் நிர்த்தாளிதமானது கண்கூடாயிற்று,

சிருட்டி கால பாம்பரையாய்த் தொன்று தொட்டுள்ள வைசியர் வாணியர்களே யென்பதும், இப்பர், கவிப்பர், பெருங்குடிய ரென மூன்று பகுப்பினதாய், ஆயிரங்கோத்திர முடையவர்களென் பதும், வக்கு மகா ருஷியின் சந்ததியி லுற்பத்தியானவர்களென் பதும், கோவைசியர், பூ வைசியர், தனவைசியரென்று மூன்று, பதங்களும் சாதாரணமாகச் சரியான அர்த்தத்தைத் தரும்போது வாணியர்களையே பிரதிபாதிக்கின்றதென்பதும், பல நூலாராய்ச்சிகளால் செவ்வனே யறிவுறுத்துமென்க, மனுஸ்மிருதி திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் பெருங்குடி வாணிகர் மாபி லுதித்த கோவலன் சரிதங் கூறுஞ் சிலப்பதிகாரமும், வைசிய

புராணம், கோவல வெண்பா, பந்தனந்தாதி முதலிய காவியங்களி லுள்ள செய்யுட்கள் வாணியரையே வைசியரென்று நிரூபிக்கப்பட் டதுணர்க.

சிலப்பதிகாரம் பக்கம் 130—370.

"பெருங்குடி வாணிகன் பெருமடமகளே" எனவும்,
"பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்" எனவும்,
"மாசிலாத பெருங்குடி வாணிப" எனவும்,

கோவல வெண்பா.

"வணிகர் குலக்கொழுந்தே" எனவும்,
"கோதிலா நல் வணிகர் கோமான்பல்" எனவும்,
"செல்வ முதலவைத்துச் செய்தபெரு வாணிபத்தாற்" எனவும்,
"உற்றூர்க்குறு துணையே யூர்வணிகர்கோமானே" எனவும்.
"அச் சொல்லாலுட்டு யரமாறிப் பெருவணிகன்" எனவும்,
"தன்னிடம் போய்ச் சேரத்தன வணிகர்" எனவும்,
"கொடியே குலவிளக்கே கோவணிகன் பெண்ணே" எனவும்
"மேதக்க வாணிபரின் மேலோனே" எனவும்,
"பூவணிகனின்ற புறம்" எனவும்,
"நின்ற பொழுது நில வணிகன்" எனவும்,

பந்தனந்தாதி.

"குடி செழுசீர்ப் பூம்புகார்க் கோவணிகன் பந்தன்"
"கூடற் றமிழ்ச் சங்கங் கொண்டாடுங் கோவணிகன்"

எனவுங் கூறியுள்ளவைதச் சீர்தூக்கிப் பார்க்கின் ஓங்கூர் இச்சி இரத் தினச்செட்டியார் புத்தியில் நன்கு பதியும்.

சிலப்பதிகாரம்—இந்திரவிழாவூரெடுத்த காதையில்

"பீடிகைத்தெருவும் பெருங்குடி வாணிகன்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்"

என்பதற்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார்

"பெரிய குடிப் பிறப்பையுடைய வாணிகரது மாட மாளிகைத் தெருவும்"

என உரை யெழுதியவதை செவ்வனே ஓங்கூர் இச்சி இரத்தினச் செட்டியார் கடைப்பிடிப்பாராக.

ஜாதிகளின் சிறப்பும் வீதிகளின் சிறப்புங் கூறுமிடத்து வாணி யரைத் தவிர வேறெந்த வெள்ளாஞ் செட்டி பேரிச் செட்டி காசுக் கார செட்டி யிருகக் கூறப்பட்ட செட்டிகளையாவது அவர்களின்

வீதிகளையாவது கூறுமையால் வாணியரே வைசியரென்பதும்பேரிச் செட்டிகளையும் காசுக்காரச் செட்டிகளையும் வைசியரென யாண்டுங் கூறியதின்றென்பதும், வெள்ளிடை மலைபோல் தெள்ளிதினுணரக் கிடக்கின்றது. வெள்ளாஞ் செட்டி, பேரிச் செட்டி, காசுக்காரச் செட்டி யிதுகைக் கூறப்பட்ட செட்டிகள் அனைவரும் தற்காலம் கௌரவத்திற்கும், ஜீவனோபாயத்துக்குமாக வர்த்தகம் வியாபாரத்தைக்கொண்டு (செட்டு) வியாபாரத் தொழில் காரணம்பற்றிச் செட்டிகளென்று வைத்துக்கொண் டிருக்கின்றார்களே யொழிய. பிறப்பாலும், கர்மத்தாலும் வணிகர்க்குரிய மற்ற இலக்ஷணங்களாலும் செட்டிகளென்று வைத்துக்கொள்ள விடமில்லை.

"செட்டி வாணிகன் செவ்வேளாம்"

என்றபடி செட்டிப் பட்டம் வாணியருக்கே உரித்தென்று நாம் முன்னே உதகரித்திருக்கின்றோம். இன்னும்,

பாவநாசத் தல புராணம்.

"தீங்கு தேடிய செட்டி யொருதினம்
பாங்கு தேடிப் பவ மொழித்தானெனி
னீங்கிடா வகை நித்தமு மாடுவோ
ரோங்கு மேன்மை யுரைப் பரிதாகுமால்"

"சாதமாச் செட்டி தன்மை யியம்பினேம்
வாத போத மாமறை யர்தணிர்" எனவும்,

(மணிமேகலை பக்கம் 144)

"என்றவ னுரைத்தலு மெரிவிழி நாகனு
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து" எனவும்,

(ஷை பக்கம் 234)

"பின்னுள் வந்து நின் பெற்றிமை நோக்கி
நின்குறி யிருந்து தம்முயிர் நீத்தோ
ரொன்பது செட்டிகளுடை லென்பிவைகாண்" எனவும்,

"அறிஞர் குழுவ வமைத்தன ரன்னவர்
வறிதின் மூவா வைசிய ரென்னின்
வாணிகன் செட்டி யாவழங்கு மாப்போல்
ஏனுற மற்றையோர்க் கியம்புத லுண்டோ" எனவும்,

(ஊமை தமிழறிந்த திருவிளையாடல்)

"தலைமிசை யெங்கும் விரித்தியற் சொக்கன் றகைமையை மிகமிக வாழ்த்தி
யலகிலா வூழி யிருந்தன ரிருந்தவருந் தமிழ்ச் செட்டியாஞ் செட்டி
யிலகிய மயில்மீ தறுமுகத்தோடு மினிய பன்னிரு கரத்தோடும்
புலவர் கண்டிறைஞ்ச வருளினல் விளங்கிப் போயினன் சாபமுநீங்கி"

எனவும் கூறிய பிரமாணத்தினல் வேறார்ந்தறிக,

பரதர் என்ற பெயரும் வாணியருக்கேயுரித்து யென்பது.

(சிலப்பதிகாரம் 5-வது இந்திரவிழாவூரெடுத்த காதை 157)

"ஐம்பெருங் குழுவு மெண் பேராயமு
மரச குமாரும் பாத குமாருங்
கவர் பரிப்புா வியர்களிற் றின்றெருகுதியர்" எனவும்,

(ஷை 6-வது கடலாடு காதை 155)

"அரசிளங் குமாரு முரிமைச் சுற்றமும்
பரத குமாரும் பல் வேருயமும்" என்றுங், கூறினர்.

(எட்டிப் பட்டம்) வாணியருக்கு அரசர்களாற் கொடுக்கப், பட்டதோர் பட்டம்.

(மணிமேகலை பக்கம் 374)

"வாணிக மரபின் வரு பொருளீட்டி
நீணிதிச் செல்வனய் நீணில வேந்தனி
னெட்டிப் பூப் பெற்றிருமுப் பதிற்றியாண்
டொட்டிய செல்வத் துயர்ந்தோ னயினன்"

"எட்டிக் குமானினி தினியக்கு
மின்னெளி வீணைப் பண்ணெலி வெரீஇ
எட்டி காவிதிப் பட்டந் தாங்கி
எட்டி சாயல னிருந்தோன் றுறுது" எனவும்,

காசி காண்டம்

"கட்டிலிற் பீடந்தனி லிருந்தருந்தல் கப்பறை தனிலுணவாகா
வுட்டெனி மறையோ ரளித்த சோறமிர்தம் வேந்தர் சோறுவந்த
லெட்டிய ரளித்தவடி சினவடிசில் பின்னவ ரினிதிமூரல் [பாலடிசி
கொட்டிய குருதியாதலாற் பின்னேரிடத் துணல்குறிப்பினு மாகா"

எனவும் கூறியதனுல் எட்டியர் பட்டம் வாணியர்க்கே யுரித்தாகும்

வர்த்தகஞ் செய்யுமியல்புடையா ரனைவரையு மொருங்கே வாணியர் வைசியரென்று கொள்ளி னஃ தொருவாற்றானும் பொருந்தாது. என்னனமெனின் செட்டி யென்னுப் பட்டத்தை (உயர்ந்தோர்) பிராம்மணர் க்ஷத்திரியர்கள் ஏற்றுக்கொள்ளத் தாழ் வென்னும் வெறுப்பும், சூத்திர சங்கர ஜாதியார்களிதை யேற்றுக் கொள்ள விருப்பும், அவ்வித மேற்றுக்கொள்ள விரும்பினும், வைசியன், வாணிகன் என்னும் ஆண்பால் விகுதிகொண்ட பதத் துக்குப் பெண்பாலான வாணிச்சி என்னும் பதத்தை யேற்றுக் கொள்ள இஷ்டமில்லாமையும், அப்படி இஷ்டமிருந்தாலுமிடமில் லாமையும், இன்னும் செட்டுக் காரணமாய்ச் செட்டி என்று வழங் கிக்கொள்ளுகிறதைத் தவிர சிரேட்டரெனும் வணிக பத மருவிச் செட்டி யென்று இவர்களைக் கொள்ளக்கூடாமையாலும் மூன்றாம் வருணத்தாராகிய வைசியரெனும் வாணியர் ஓரே வருணமன்றி வாணிகர், வாணியர் வாணியரெனப் போலியாய்த் திரிந்து வழங் கினும், வெவ்வேறு அர்த்தங்கொண்டு வெவ்வேறு (வெள்ளாஞ் செட்டி, பேரி செட்டி, காசுக்காரச் செட்டி முதலிய) செட்டிகளைக் குறிக்காமல் வாணியரென்ற ஓரே வருணத்தைக் குறித்துக் காட்டு கின்றமையாலும் நன்கு விளங்கும்.

வாணிகர், வாணியரென வேறு வேறாய்த் தனித்தனி ஜாதி யாயில்லாமல் வைசியர் வாணியரெனுமொரு ஜாதியே உலகமெங் கும் பரவி நிற்கும் வழக்காலும், ஆயிரங் கோத்திரப் பெயராலும், தொழிற் பெயராலும், சிறந்து வழங்கி வருகிறதே தவிர, தனித் தனி வெவ்வேறு ஜாதிகளெனு மர்த்தங் கொண்டு வழங்காமை யாலும் வாணிச்சி யென்னும் பெண்பால் விகுதி கொண்ட பதத் திற்கு வைசிய ஸ்திரீ யென்று அர்த்தங் கொடுக்கும் வேறு பதம் வேறு எந்த ஜாதிப் பெண்பால் விகுதி கொண்ட பதத்திலு மின்மை யாலும் விளங்குகின்றது.

மண்சுமந்த திருவிளையாடல்.

“முதுபோகரிற் றென்கிழை மூலமனையிலிருப்பானோ
ரிதமார்பிட்டு வாணிச்சிக் கிடுங்கோலமைக்கோ ராளின்றி
விதிராவழுதுவிழுந்தெழுந்து மேவுதண்டமாற்றாமல்
மதிவாயுழன்று திரியுங்காற் கண்டானெங்கும் பார்துள்ளான்”

என்னும் பாசுரத்திற்கு நன்னூல் மயிலைநாத ருரையில் வாணிகன்

என்னும் பதத்திலிருந்து வாணிச்சி யென்னும் பகுபதம் தோன்றிய தென, பதவியலில் வரைந்துள்ளது மிகவும் வெளிப்படை.

ஷை திருவிளையாடல் (30 பாசுரம்).

பாண்டியன் அடைபடாத அம்மையாரது பங்கைக்கண்டு, இது யாருடையதென்று வினவுகையில் (காவலன்கூற்று)

34வது செய்யுள்.

'மன்ற நிகழ்பிட்டு வாணிச்சி கோலநறையி
தின்றிங் கவனிட்ட கொற்று ளிவனுழப்பி
வன்றிறலீர் யாங்கள் அமைப்ப மதியாது இடர்
இன்று விளையாடு கின்றான்போ யென்றார்கள்''

இதில் வாணிச்சியென்ற சொல்லுக்கு வணிகமாது என்றுங் கூறியுள்ளார்களுரையாசிரியர்கள் இன்னும்

''மண்ணெடுத் தடிபட்டு வாணிச்சி பிட்டு
வாங்கிவாங்கித் தின்றாடி யுங்கள் சிவனார்''

என்பதையுங் கூர்ந்து நோக்கினால் நன்கு விளங்கும்—இதுநிற்க

''சக்கிரி குயவன் செக்கான் நராபதி நெடுமால்பாம்பு''

என்ற விடத்துச் சக்கரமிருக்குங் காரணத்தை முன்னிட்டு குயவன், செக்கான், அரசன், விஷ்ணு, பாம்பு என்று வழங்கினதே தவிர வாணியர் அல்லது வைசியர், மன்னர் அல்லது க்ஷத்திரியர் என்பதை ஆக்ஷேபித்துக் கூறினாரில்லை.

பெரும்பாலர் ஆபத்விருத்தியாக தாழ்ந்த தொழில்களைச் செய்கின்றதினாற்றாழ்ந்த ஜாதியாரெனக் கூறுதல் சிறிதும் பொருந்தாதென்பதையும் பிராமணர் க்ஷத்திரியருடைய தொழிலையும், க்ஷத்திரியர் வைசியருடைய தொழிலையும், வைசியர் சூத்திரருடைய தொழிலையும் ஆபத்விருத்தியாகச் செய்யக்கூடுமென்று மனுஸ்மிருதி, பராசாஸ்மிருதி முதலியவைகள் பிரதிபாதிக்கின்றதென்பதை நன்கறிந் தடங்குவாராக—இவர் கம்பர்கூறிய

''செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே''

என்னும் பாசுரத்தைச் சிர்தூக்கிப் பார்க்கக்கூறினர்.

இவரது விசாலமான மதிக்கு இவரை வீணரெனக்கூறப் பின்வாங்கார் கவிவாணர்.

வித்துவான்களுக்கு ஒருவனுபகாரஞ் செய்யினவனைப் போற்றிப் புகழ்வர்.

அங்ஙன முபகரிக்காதவனை இகழ்வாரென்பது வித்துவான்களின் கூற்றுமனுபவமுமாம். "போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடிற் றூற்றினுந் தூற்றுவர்" "வண்கணாளர்" என்னும் பாசுரத்தை இவர் கண்டாரில்லை கிற்க சோழன் காலத்தில் எமது வாணியகுலத்திலுதித்தவரும், கவிராஜ சிங்கமுமாயிருந்த தாதப்ப செட்டியாரென்பார் தமக்குச் சோழன் கொடுத்த பரிசுகளைப் பார்த்தகம்பன் பொருளுய், சோழனைவிளித்து எம்போன்றவர்களை இழிவு படுத்துவதற்கு இவ்விதம் பரிசுதந்தனை என்றதற்கு எமது கவிராஜ சிங்கமாகிய தாதப்ப செட்டியார்.

"கைம்மணிச்சிரன்றிச் சிறியாக் கம்பநாடன் சொன்ன
மும்மணிக்கோவை முதற்சிற்பிழை மூனவானெயிற்றுப்
பைம்மணித் துத்திக் கனமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண் பிதுங் கப் பதம் பேர்த்த செயதுங்கனே"

என்னுஞ் செய்யுளால் ஷை கம்பர் பாடிய மும்மணிக்கோவைக்குக் குற்றங்கூறி, யவரையு மிழித்து வசைபாடியதினு லக்கம்பர் நாணியது யாவருமுணர்ந்ததே.

ஷை கம்பரே மற்றோர்காலத்தில் (ஏரெழுபதில்)

"தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன்னவராகி
யெழுங்குலத்திற் பிறந்தாலென்னிவர்க்குப் பின்வணிகரென்னுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென்"

என்றும் "வேதியர் தமுயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும் நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்" என்றும் "நிறைமயங்காதருள் விளங்குஞ் செயன்மயங்காத் திறல்வேந்தர் நிறைமயங்காவணிகேசர் நிலைமயங்கா வந்தணர்கள்" என்றும்

"அந்தணர்க்கு வேதமுதலரசர்க்கு வெற்றிமுதன்
முந்திய சீர்வணிகர்க்கு முதலாய முதலுலகில்
வந்தவுயிர் தமக்கெல்லா மருந்தாக வைத்தமுதல்"

என்றும் "சீர்வளரு மறைவளருந் திறல்வேந்தர் முடிவளரும், பே[illegible] வளரும் வணிகர்க்குப் பெருநிதிய மிகவளரும்" என்றும், (கைக[illegible] வம்).

> "நீலி தனக்கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
> கோலியபயங் கொடுக்குங்கை" என்றும்
> 'மனக்கவலையுற்ற வணிகன்முன்னேநின்று
> தனைக்கா வெனக்கேட்ட தங்கக்கை''

என்றும் புகழ்ந்துரைத்தனர்.

(இகபரஞான சாரத்திரட்டு முதற்பாகம் 16வது பக்கம்).

"ஆட்சிதருநீதியுங் கொற்றவர்கள் புஜபலமு மதிவீரர் சூர்வ லியு, மாபிரவர் வாணிபமியற்றுதலு மூலகெலா மன்னதாதா வென் பதும்" எனக்கூறிய பாசுரத்தாலும் வாணியரையே மூன்றும் வரு ணத்தாராகிய வைசியரெனப் பசுமரத்தாணிபோல் காட்டினார்களே யன்றி, பேரிச்செட்டி முதலிய செட்டிகளை வணிகரெனக் கூறிய தில்லை யென்பது அங்கை நெல்லிக்கனியாகும்.

இன்னும் வைசியர்குலத்திற் சிவபிரானுக்கு விசேஷ திருவுள மிருந்தமையை விளக்குவான்வேண்டி "மருமகற்கு வழக்கிசைத்து வளையல்விற்று மாணிக்கவணிகாகி" எனவும் தந்தைவழி மைந்தன் என்பதை விளக்குவான் "வணிகவுருத்திர சன்மர்" எனவும். வைசியர்க்கழகு வளர்பொருளீட்டல் என்னும் இலக்கணம் உருத் திரசன்மர்க்கிருந்தமை "பிதாவருளும் பொருள் வளர்த்தார்" என்ப தாகக்கொண்டு "பொருண்மகனும் வணிகவுருத்திர சன்மர் பிதா வருளும் பொருள் வளர்த்தார்" என்றும், "எனையாளுஞ் செட்டி மையாரியற்பகையாம் பணிவுறவே" என்றும் "இன்னமொரு வகையுவகை வெண்காடர் குலவணிகரின்புகூர" என்றும் "என் ணிய சீறம் பெருளோடின்பமுறு வணிகர் குழாங்—கண்ணிய வீட்டின்பமுமேற் காண்பாராயினிதமர" என்றும், "புக்குளாரிலர் புகாரெனும் பட்டினம் புடைபோய்—மிக்க நீதியால் வாழ்வணி கேசன்தம் வீதி'' என்றும் கூறிய பிரமாண முகத்தால் நமது தவ ராஜசிங்கமாகிய பட்டிணத்துப்பிள்ளையார் வாணியாகிய வைசிய ரென்பது நாம் முன் கூறிய வுண்மைகளால் நிலைநாட்டியதென்க—இவரை பட்டணத்துப்பிள்ளையார் எனக்கூறுவதற்கு காரணம், காவிரிப்பூம்பட்டணத்தில் இவரே முதல்வராகியிருந்தமையாலும், அக்குடிக்கேயன்றி அப்பட்டணத்திற்கே இவர் குமாரர் என்னும் பொருள்படப் (பட்டிணத்துப் பிள்ளையென்பது) குடிப்பெயரா யமர்ந்தது.

" பொன்னிலங்கிய பூம்புகார்ப்பட்டினந்
தன்னின் மன்னுந்தலைவர்தலைகளாற்
பன்னரும் புகழ்ப் பட்டினத்துப்பிள்ளை
யென்னுமிக்குடி நாமமியன்றுளால்"

எனவும் ஷை பிள்ளையார் புராணவழியாக நன்கு வெளியாயிற்று இவரை வேளாளர், பேரிச்செட்டி, காசுக்காரச்செட்டி முதலிய வர்கள் தங்கள் குலத்தவர் என்று கூறுவது சாலவும் பொருந்தா தென்க

தாழ்குலத்தோர் கோடி சென்மந்தவம்புரிய வேண்டுமுயர்ச்சதுர்த்தாரகக்
கேழுழவர்கோடி தவஞ்செயவேண்டும் வணிகர் சென்மங் கிடைக்கவேண்டிற்
சூழ்வணிகர் கோடிசென்மந் தவம்புரியினரசரெனத் தோன்று நிற்பர்
வாழரசர்கோடி சென்மந்தவஞ் செயினுங்கிடைப்ப தரிதுமறையோர் சென்மம்

கூறியதுபோல் தாழ்ந்த வகுப்போர் வாணியாகப் பிறத்தல் மிகவு மரிதெனப் புலப்படுகின்றதால் கௌசிகன் ப்ரமரிஷியாவதற்குத் தான் புரிந்த தவத்தினலறியலாம்.

பிராமணோ பகவான் ருத்ரோ
க்ஷத்திரியோ பரமோஹரி
வைஸ்யப்பிதாமகஞ்சைவ'
இந்தர ஸூத்ர அஜாயதே.

என இருக்குவேதம் கூறியபடி பரமசிவம், பிராமணரென்றும். விஷ்ணுமூர்த்தி க்ஷத்திரியரென்றும் பிரமன் வைசியரென்றும் இந்திரன் சூத்திரரென்றும், அதுபோலவே பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர் பிராமணரென்றும். புஜத்திற் பிறந்தவர் க்ஷத்திரியரென்றும், துடையிற்பிறந்தவர் வாணிய வைசியரென்றும். பாதத்திற் பிறந்தவர் சூத்திரரென்றும், சுக்கிர, குரு, பிராமணரென்றும், சூரியன், செவ்வாய் க்ஷத்திரியரென்றும், புதன், சந்திரன் வைசியரென்றும், சனி, ராகு, கேது சூத்திரரென்றும், கற்கடகம், விருச்சிகம் மீனம் பிராமண ஜாதியென்றும், சிங்கம், தனுசு, மேஷம் க்ஷத்திரிய ஜாதியென்றும், துலாம், கும்பம், மிதுனம் வைசிய ஜாதியென்றும், கன்னி, இடபம், கும்பம் சூத்திர ஜாதியென்றும், மிருகங்களில் யானை. குதிரை, பிராமண ஜாதியென்றும், சிங்கம் க்ஷத்திரிய ஜாதியென்றும், பசு வைசிய ஜாதி யென்றும், எருமை சூத்திர ஜாதியென்றும், பக்ஷிகளில் அன்னம் காகம் பிராமண ஜாதியென்றும், சரபம் இராஜாளி, க்ஷத்திரிய ஜாதியென்றும், மயில் வைசிய ஜாதி

யென்றும், ஆர்தை சூத்திர ஜாதியென்றும், விருக்ஷங்களில் மா, வில்வம் பிராமண ஜாதியென்றும், அரசு, பூவரசு, க்ஷத்திரிய ஜாதியென்றும், பலா வைசிய ஜாதியென்றும், எட்டி சூத்திர ஜாதியென்றும், இரத்தினங்களில் வயிரம், முத்து பிராமண ஜாதியென்றும், மாணிக்கம், க்ஷத்திரிய ஜாதியென்றும் புஷ்பாகம், வைடூரியம், கோமேதகம் வைசிய ஜாதி யென்றும், நீலம், மரகதம், சூத்திர ஜாதி யென்றும் பிரிக்கப்பட்ட சதுர் வருணங்களு மிவர்காட்டிய முதல் வழி, சார்பு நூல்களால் வகுக்கப்பட்டதோ வென்பதை நன்காராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராய்வதற்கு இவருக்குப் போதுமான ஆவகாச மின்மையாலும் வைசியர் என்று நிரூபிப்பதற்கு வேறு பிரமாணங்களில்லாமையாலும் வாணியர்களுக்குறிய பெயரும் கீர்த்தியும் தம்முடையதே யென்று எடுத்துத் தன் தலையின்மேலிட்டு நிரூபிக்கவந்தது யாருமில்லாவூரில் அஸ்வமேத யாகஞ் செய்ய வந்ததை யொக்கும். பேரிச் செட்டி யென்றும் காசுக்காரச் செட்டி யென்றும் சொல்லப்பட்ட இவர் தமது வாயில் வந்தவாறு கூறுவதினால் தமது குலம் நாம் முன் கூறிய நியாயங்களாற் சிறக்குமோ, ஒருக்காலுஞ் சிறக்காது சிறக்காது. தசாங்கங்களும் மற்றைய சீர் சிறப்புகளும் வாணியர்களாகிய வைசியர்களுக்கே முக்கியமாகவுரித்து என்பதை நீவிர் மனந்தேறி யடங்குவீராக, உங்கள் மரபாகிய பேரிச் செட்டி காசுக்காரச் செட்டி, என்பவைகள் மூன்றுவது ஸ்தானத்தை எடுத்துப்பார்க்க வந்த முடவன் கொம்புத்தேனுக்காசைப் பட்டது போலிருக்கின்றது. எவ்விதம் வந்தபோதிலும் அந்த மூன்றுவது இடம் உமக்கும் உமது செட்டிகளுக்குங் காலத்திரயத்துங்கிட்டாது கிட்டாது. என் வீணில் வருந்த வேண்டும்.

ஓ. சி. இ. செட்டியாரே! உமக்கு மனுஸ்மிருதி பராசரஸ்மிருதி. இருக்குமிடந் தெரிந்திருந்தால் இவ்வாறு பிரலாபித்திருக்கமாட்டீர். உமது குலத்திலுமக்கு முன்னிருந்தவர்கள் யாரும் படியாதவர்களா: நீரே தற்போது படித்து முன் வந்து நிஜ நிரூபணஞ் செய்ய வந்தது கீர்த்துளிதமானது சாலவும் விசனிக்கத்தக்கதே.

நீர் தம்முடையவரென்று போர்த்துக்கொண்ட காரைக்காலம்மையார், இயற்பகையார், அமர் நீதியார் பட்டினத்தடிகள் பருணர், கோவிலன், கண்ணகி முதலியவர்களை பேரிச் செட்டி எனும்

றாகிலும் காசுக்காரச் செட்டி யென்றாகிலும் கூறினார்களா. அவர் களை வாணியர் வாணிகர் வாணிபர் என்று கூறியதே யன்றி வேறில்லை. வாணியர் என்றாலும் வணிகர் என்றாலும் ஓர் பொருட் கிளவியென்று நாம் முன்னே உமக்கு நன்கறிவித்தோம். கோவலன் வம்சத்து ஆதி புருஷன்மாச்சாத்து வாணிபன் என்பதை யறிந்திலீர் போலும் ரீஸ்துரையாற் செய்யப்பட்ட சைக்லோபேடியா என் னுங் கிரந்தத்தின் ஜாதியென்னுந் தலைப்பிலும் நிகழ்கால சபாப்பிர சங்கியாகிய பார்க்கு துரையாற் செய்யப்பட்ட கிரந்தம் 806-வது பக்கத்திலும், கல்கத்தா ரிவிஞு என்னும் பத்திரிகை 15-வது புத் தகம் 29-வது இலக்கத்திலும், வார்டஸ்துரையாற் செய்த ஹிந்துக் களின் பூர்வகால சரித்திரம் 3-ம் புத்தகம், 66-வது பக்கத்திலும் மூர்துரையாற் செய்யப்பட்ட ஹிந்து வேதாந்த சாத்திரம் 343-வது பக்கத்திலும், கோல்புருக் துரையாற் செய்யப்பட்ட பிர சங்க பத்திரிகை 270-வது பக்கத்திலும் ஸ்டீல் துரையாற் செய்யப் பட்ட ஹிந்துலாவையும் வழக்கத்தையும் பற்றிய கிரந்தத்திலும் வாணியன்வைசியன் என்பதுபாக்கக் காணலாம். 1874-ம் வருஷத் தில் எமது குலத்திற்றோன்றிய மகா வித்வ சிரோமணிகளாயிருந்த ம. கோவிந்த செட்டியார், கோளம் அப்பாசாமி செட்டியார், வாணியம்பாடி, நாராயணசாமி செட்டியார், மதுரை, கோவிந்த செட்டியார் இன்னும் மற்றுமுள்ள பல வித்துவான்கள் வாணியர் வைசியரென்ப துணர்த்தல், வாணியரே வைசியர்கள் எனப் ல நூல்களியற்றியதை மறுப்பாரின்றி, அவர்களால் வெளி ந்த.

வெற்றிக்கொடியோன் முதலிய பத்திரிகை வாயிலாக நிலை ட்டியது, அக்காலத்திலிருந்த நமது பேரிச்செட்டி வித்துவான் ளுக்குத் தெரிந்த விடயமே. அவர்கள் யாவரும் மறுக்கவிடமில் மையாலும் பலநூலாய்ந்த அறிவாளிகளும் மறுத்துரையாட ல்லை. ஐயா நீவிர் யார் என்பதை சற்றே கவனிப்பீரேல் நமக்கு ண்மை விளங்க ஆராய்ச்சி செய்தடங்குவீராக. உமக்கு வக்குல காருஷி சந்ததியும், ஆயிரங்கோத்திரமும் எங்ஙனஞ் சித்தித்தது ன்பவைகளை யறியாது அழுக்காற்றாற் றலை காட்டுகின்றீர். சுவா ம்பு மனுவால் கூறப்பட்ட வைசிய புராணமாகிய வட நூலைச் மணிப்புலவர் தமிழில் மொழி பெயர்த்ததை, வித்துவ ரோண்மணிகளைக் கொண்டு கருத்தறிந்தடங்குவீராக.

வைசியர்க்குரிய கர்மகிரியைகளாலும், வக்குவ மகாருஷியின் சந்ததி யுற்பத்தி யானதினாலும், ஆயிரங் கோத்திரங்கள் பெற்று விளங்குவதினாலும், சுதுசந்தனது குமாரனாகிய சீவகனைக் கந்து கடன் என்னும் வணிகன் வளர்த்ததினால் சிந்தாமணி, மாச்சாத்து வாணிப மாருஷி கோத்திரோற்பவராகிய மாசாத்து வாணிபன் மகனாகிய கோவலனை முன்னிட்ட சிலப்பதிகாரம், மாதவியின் மகள் மணிமேகலையின் துறவு முதலியவற்றை முன்னிட்ட மணிமேகலை, லவாவாணிப கோத்திரோற்பாராகிய நவகோடி நாராயண செட்டியின் இரண்டாவது மனைவியின் குமாரனை முன்னிட்ட வளையாபதி குண்டலகேசி யென்னும் வைசிய கன்னிகைகளான் என்னும் வணிக புத்திரனை மணந்திருக்கையில் ஓர் நாள் பரிகாலத்தால் கணவனை நீ கள்வன் என்னக்கணவன் கோபங்கொண்டு ஒருநாள் இவளைத் தனிக்கொண்டு பர்வதத்திலேறி நீ என்னைக் கள்வனென்றமையாலுன்னைக் கொல்லத் துணிந்தேனென அவளும் அவனை முன் கொல்ல வெண்ணி நான் சாவேனாகி லும்மைவலங்கொண்டு சாவேன் என வலங்கொள்வாள் போன்று கணவனை பர்வதத்திலிருந்து விழத் தள்ளினள். அவனுமிறக்க இவளும் கணவனைப் பிரிந்த துக்கத்தால் நாவல் நட்டுப் பாசமயங்களை வென்று ஞானமாயினதை முன்னிட்டு குண்டலகேசி, ஆகிய பஞ்சகாவியங்களைப் பெற்றதினாலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கூலவாணிகர், சித்தலைச் சாத்தனார், முதலிய வித்வஜனங்களிருந்து கீர்த்தியுற்ற புகழ்ச்சியினாலும் சோழன் காலத்தில் தாதப்ப செட்டியார் என்னுங் கவிவாண கம்பருடைய மும்மணிக் கோவைக்கு குற்றங்கூறி அவரையு வசைபாடி கூவம் என்னும் பதியையும், விருது முதலியவைகளை பரிசாகப் பெற்ற புகழ்ச்சியினாலும் மீண்டும் ஷை கம்பரை கூவ நகரைச் சிறப்பித்து பாடும்படி கூவநகரவாசிகள் கேட்டதற்கு தாதனுக்குப் பரிசாகவந்த நகரை நாம் பாடமாட்டோமென்று மறுத்ததற்கு ஷை நகரவாசிகள் கம்பரது சிவிகையைத் தாங்கியு மன்றாடியுங் கேட்டதற்கு ஒருவாறிசைந்து,

"ஓங்கிய செந்தமிழ்த் தாதற்கடிமையன் றூதனா
னுங்கவி சொல்வது மில்லையென்றே கம்பநாடன் சொல்ல
ஆங்கவனேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுத்
தாங்கவி கொண்டதுங் கூவந்தியாக சமுத்திரமே"

என்னும் பாடலின் முதலடியில் வைத்த சிறப்பினாலும், கடந்தை வாணியன் சிவபெருமான் திரிபுரதகன காலத்தில் பூஜைக்கு வேண்டிய நைவேத்திய சம்பாரங்களைக் கொடுத்ததினாலும், நாகந்தை வாணியன் சூரசம்ஹார காலத்திற் சுப்பிரமணியருடனிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடை செய்து செந்தோன்றி மாலையைப் பெற்றதினாலும், நாகந்தை கோத்திரத்தானாகிய பந்தன் ஔவையாருக்குப் பொற்படாமும், கருநெல்லியன் கனியையுங் கொடுத் தந்தாதி நவமணிமாலை பெற்றதினாலும், திருமயிலையில் அரவந் தீண்டி யிறந்த தமதுகுல சிவநேசரது மகளாகிய பூம்பாவையின் அஸ்தியை ஸ்ரீ, ஞானசம்பந்தப் பெருமானா லெழுப்பப்பட்ட கீர்த்தியினாலும், இன்னும் இளவேட்டன் சோழனிடம் வாணியன் பாடியைத் தாப்பெற்ற கீர்த்தியினாலும், காமக்கிழவன் திருக்காஞ்சியில் பார்வதியார் சிவபூசை செய்த காலத்தில் வேண்டிய சாமக்கிரியைகளைக் கொடுத்ததனா லருளைப் பெற்றதினாலும், வண்ணக்கன் திருக்கடையூரில் இயமனுக்கு அபயங் கொடுத்தவருளைப் பெற்றதினாலும், குளத்துடையான் சேரன் சோழன் பாண்டியர்க்குப் பவளம், முத்து, கெம்பு, வாங்கிக் கொடுத்து கீர்த்தி பெற்றதினாலும், மன்னுடைய மகாருஷி கோத்திரத்தாளாகிய வந்தியம்மைக்கு பரமசிவம் கூலியாளாய் வந்து திருவருளைச் சாதித்ததினாலும், கொள்ளந்தை சோழனுக்கு விற்பிடிமணி கொண்டுவந்து கொடுத்து கீர்த்தி பெற்றதினாலும், சோழ வாணியன் சிபிச் சக்கிரவர்த்தியால் கீர்த்தி பெற்றதினாலும், தேவந்தை வாணிப மகாருஷி கோத்திரன் ஸ்ரீரங்க நாதருக்குகற்பூர தீபமிட்டு அவருளைப் பெற்றதினாலும், பையவாணிப மகாருஷிகோத்திரன் காவிரியணையைப்பருதியாலடைத்துகீர்த்தியுற்றதினாலும், கண்ண வாணியன் வேளான் ள்ளைக்காகத் தன் பிள்ளையை பாண்டியனுடைய சபையில்வாளால் றிந்து கீர்த்தி பெற்றதினாலும், முடக்கு மாணிக்கம் கோர்த்து ர்த்தி பெற்றதினாலும், காஞ்சிபுரத்தில் சோழன் சபையில் தலை ழக்குரைத்து கீர்த்தி பெற்றதினாலும், காஞ்சிபுரத்தில் கலிக்கியமந் ரன் சன்னிதியில் தலையறிந்துக் கொண்டு கீர்த்தியுற்றதினாலும், ஹாராஜன் கையிற் காளம்பெற்று மிகுந்த கீர்த்திபெற்றதினாலும், ன்னு நமேசர் பல திருத்தொண்டுகள் புரிந்து கீர்த்தியும் மோக்ஷ மடைந்ததுபற்றியானும்,

“செய்ய திருவேகம்பம் பொன்னினால் வேய்ந்துமுயர்
தென்னனைச் செண்டில் வென்றும்
திடமுடன் கொங்குபெரு வழிகண்டும் படிமன்னர்
செய்ய தம்பிரா னென்றுமே
பய்யவே தலை வழக் குரைத்துமுயர் சங்கத்துப்
பஞ்ச காவியங்களென்றும்
பாமாலை சூடவு மிரட்டையர்கள் மணிமாலையிடவும் பேறுபெற்றுத்
துய்யவொரு முடக்குமணி கோர்த்துத் துகளிலா
யானைதனிடையை யோர்ந்துஞ்
சொல்லரிய மனைவியை யீந்ததுஞ்
சூழ்சோம சுந்தரன் பிட்டுண்டதும்
வெள்ளவொரு பின்னவன் பிள்ளைக்காத் தன்மகவை
வீரமுடன் வாளிலேற்றுத வெகுவரிசை பெற்றுவளர்
வணிக ராயிரவர் குலமென்மேலு மிகவாழ்கவே”

எனவும்,

ஆனபுகழ் சேரருளாளர் கோயிலிலே
மானவிருளின் மழையில் வரும் வழிக்கே,
கானமுள்ள நாரணனார் கைவிளக்குத் தான்பிடித்தான்
ஞானத் திருக்கச்சி நம்பிகா ணம்மானை.

என அம்மானையும்,

......................................நேயமுடன்
பொற்படா மவ்வைக்குப் போர்த்துங்கை மற்புயதோன்
ஏற்க வாணியம்பாடி யேற்றிருங்கை.

என கைவளமும் போந்த பாசுரக் கீர்த்திகளினாலும்,

ஏலேல சிங்கர் திருவள்ளுவ நாயனாரால் புகழ்ப் பெற்றமையாலும், வட வேங்கடம் தென் குமரி யிருகக்கொண்ட தமிழ் நாடெங்கும் வைசிய குலதிலகமாய் விளங்கும் ஷெ வக்குல மகருஷியின் யாகத்திலுற்பவித்த ஆயிரங் கோத்திரங்களையே கொண்டு விளங்குவதினாலும், நாம் சுருதியுக்தி யநுபவத்துடனு தகரித்த அறு தொழில்களைப் புரிவதினாலும், ஆங்காங்குள்ள சிவ க்ஷேத்திரங்களில் திருக்கல்யாண வுற்சவங்களில் நடைபெறும் சிவ சம்பந்திகளுக்குறிய மாலை மரியாதை சிறப்புகளினாலும், நற்பாக்கிழான் மகருஷி கோத்திரத்திலுதித்த திருக்கச்சி நம்பி என்னும் வாணியர் காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாளுக்குப் புஷ்பத் திருவால வட்ட கயிங்கிரியஞ்செய்து அவரருளைப்பெற்ற கீர்த்தியாலும்

மைசூர் நாட்டிலுள்ள சாரதா பீடம் என்று சொல்லப்பட்ட சிருங்ககிரி மடத்தை ஸ்தாபித்தவரும், திக்விஜயம் செய்தவரும், அநேக அற்புதங்களைச் செய்தவருமாகிய ஸ்ரீ ஜெகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளிடமிருக்கும் செப்பேடு சிலாசாசனப் பிரமாணத்தால் மூன்றாம் வருணத்தார் வாணியரென்று நிர்மானித்துக் கொடுக்கும் பிரசாத வைபவத்தினாலும், முள்ளன்றம், ஸ்ரீ புராண ஞானசிவாசாரிய சுவாமிகளின் திருமுகத்தாலும் வாணியரே வைசியரென்பது குன்றின் மேலிட்ட தீபம்போல் நிலைநாட்டப்பட்டது, இந்த ஓங்கர் செட்டியார் காட்டிய (எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென் பதிழுக்கு) என்னும் திருக்குறள் பாபம் இவரது தலையிலேயே வந்து விடிந்ததை யிவரோர்ந்திலர் போலும். "கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்ப மேன்" என்னும் பழமொழியை இவர் நன்கு ஆராய்ந் தறிந்திருப்பாராயின் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு முணுமுணுத்திருக்க மாட்டார். ஆகவே இவரது நிஜ வைஸ்ய நிரூபணம் நிர்த்தூளிதமாய் வாணியரே வைசியரென்பது இதனால் நன்கு விளம்பரமாய் வேறார்ந்தறிக. இனியாகிலுமிவர் நன்குணர்ந்து தமது வாணாளை வீணாளாக்காது நன்மை கடைப்பிடித்து வாழ்வாராக. இன்னும் விளக்கின் பெருகுமென விடுத்தனம்.

சத்ருசங்கார வடிவேல் துணை.

சுபம். சுபம், சுபம்,

கந்தன் பிரஸ், 32, பிராட்வே, மதராஸ்,